**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். STC 475 / 2017**
**வழக்கு சாட்சி. அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | Dr.புனிதகுமார் | **தாலுகா:** | |
| **தந்தை பெயர்:** | கோபால் | **தொழில்:** | முதன்மை தலைமை மருத்துவர்(ஓய்வு) |
| **கிராமம்:** | அறந்தாங்கி | **வயது:** | 64 /2026 |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**A1 to A7 present. Counsel persent.**

**As per Circular of the Hon'ble High Court of Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**தேதி : 21.01.2026**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் முதன்மை தலைமை மருத்துவராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்று அறந்தாங்கி வசித்து வருகிறேன். கடந்த 21.07.2013 ஆம் தேதி பிற்பகல் 01.30 மணியளவில் நான் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது வலம்பக்காடு கிராமத்தினை சேர்ந்த பிரேமா, க/பெ.குப்புசாமி என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை விசாரித்த போது அவரது வீட்டிற்கு அருகில் தெரிந்த நான்கு நபர்கள் தென்னை மட்டையால் தன்னை தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதித்த போது வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை. உடல் வலிப்பதாக சொன்னார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸ்சார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரேமா என்பவர் எத்தனை மணிக்கு என்னிடம் சிகிச்சைக்கு வந்தார் என்றால், 01.30 மணிக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லி 02.00 மணிக்கு வந்தார். பிரேமா சிகிச்சைக்கு வரும்பொழுது யார் பெயரும் குறிப்பிடாமல் நபர்கள் தாக்கியதாக சொன்னார் என்றால், சரிதான். பிரேமாவுக்கு ரத்தம் காயம் ஏதும் ஏற்படவில்லை என்று சொன்னால், சரிதான். இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்தால் இது போல் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால், சரிதான்.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**அறந்தாங்கி.**